பொது தகவல் அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி)
முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர் மாவட்டம்.
<u>தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005</u>
ஓ.மு.எண்.4131/அ5 /2023, நாள். 25.10.2023

......

பொருள் பள்ளிக் கல்வி – தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் திரு S.K. பிச்சாண்டி என்பவரால் கோரப்பட்ட தகவல்கள் – சார்பு

பார்வை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திரு S.K. பிச்சாண்டி என்பாரின் மனு

•••••

பார்வையில் காணும் திரு S.K. பிச்சாண்டி என்பார் கோரிய தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005ன் கீழ் பெறப்பட்ட மனு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(3)–ன் கீழ் மாற்றம் செய்யப்படுகிறது. எனவே மனுதாரருக்கு உரிய தகவல் வழங்கும் பொருட்டு தகவல் அறியும் உரிமைச் சட்ட விண்ணப்பத்தின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மனுதாரருக்கு நேரடியாக அனுப்பிவிட்டு அதன் நகலினை வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்ப அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பார்வையில் காணும் மனு

பொது தகவல் வழங்கும் அலுவலர் (ம)
முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்,
வேலூர் மாவட்டம்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–
திரு S.K. பிச்சாண்டி,
நெ.80. சுப்பிரமணி சுவாமி கோவில் தெரு,
காங்கேயநல்லூர்,
வேலூர் – 632 006.

RT. 225008093IN
27/09/23

நாள் : 27-09-2023

4131

S.K.பிச்சாண்டி,
நெ.30,சுப்பிரமணி சுவாமி கோவில் தெரு,
காங்கேயநல்லூர் – வேலூர் 632006.

பெறுநர்

பொது தகவல் அலுவலர் அவர்கள்,
முதன்மை கல்வி அலுவலகம்,
3வது மாடி,B.Block,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் 632009.

ஐயா,

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005– கீழ் தகவல்களை அறிந்து கொள்வது தொடர்பாக.

வணக்கம். மேற்கண்ட முகவரியில் வசிக்கும் S.K. பிச்சாண்டி ஆகிய எனக்கு ஏற்பட்டுள்ள ஐயங்களை போக்கிக் கொள்ளும் நோக்கில் தகவல்களை அறிந்து கொள்ள விரும்புகிறேன். கீழ் வரும் ஐயங்களுக்கு தகவல் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1. அரசுப் பள்ளியில் பயன்படுத்தும் தொலைபேசி,மின்சாரம் ஆகிய செலவினங்களுக்கு அரசு நிதி ஒதுக்குவதுப் பற்றி தகவல் அளிக்கவும்

2. அரசுப் பள்ளியின் இதர பராமரிப்பு செலவினங்களுக்கு ஒதுக்கும் நிதி பற்றி தகவல் அளிக்கவும்.

3. அரசுப் பள்ளிகளில் அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், தூய்மைப் பணியாளர், துப்புரவுப் பணியாளர் போன்ற பணியாளர்கள் நியமனம் இல்லாத பள்ளிகளில் அப்பணிகளை செய்வதற்கான வழி முறைகளை தெரிவிக்கவும்.

4. பள்ளி மேலாண்மைக் குழுவின் நிதியினைப் பற்றி தகவல் அளிக்கவும். மேலாண்மைக் குழுவின் பொறுப்பு மற்றும் செயல்பாடுகள் பற்றிய தகவல் அளிக்கவும்.

5. மேலாண்மைக் குழுவின் செயல்பாடுகளுக்கு அவர்கள் மாணவ,மாணவியர்களிடம் நிதி வசூல் செய்ய வழி உள்ளதா என்ற தகவல் அளிக்கவும்

6. பள்ளிகளில் புரவலர் திட்டம் மற்றும் அதன் செயல்பாட்டின் தகவல்களை அளிக்கவும்.

இப்படிக்கு
S.K. Pichandi
(S.K. பிச்சாண்டி)